**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 132/2022**

பெயர் : பாலகிருஷ்ணன் (DW1)

த/க/பெ. :

தேதி : 01.10.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல் வாதி மூத்தவர் நான் இளையவர். இரண்டாம் வாதி என் தம்பி . வாதிகள் இந்த வழக்கை நிலம் விற்று விட்டதாக போட்டுள்ளார்கள். தாவா சொத்து மூன்று அயிட்டம் மொத்தம் நான்கு ஏக்கர். 1 முதல் 15 அயிட்ட சொத்துக்களுக்காக 1/3 பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பு எனக்கு அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் 19.08.2021 ல் வாதியின் வழக்கறிஞருக்கு என் வழக்கறிஞர் திரு. கார்த்திகேயன் மூலமாக பதில் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கறிஞர் பெயர் தற்போது நினைவில் இல்லை என் வழக்கறிஞர் பெயர் திருமதி அருணா என்றால் நான் மறுக்கிறேன். என் எதிர் வழக்குரையில் தாவா சொத்துக்களை 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு கிரயஉடன்படிக்கை கொடுத்துள்ளளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . கிரய ஒப்பந்த தேதி தெரியவில்லை. நான் முன்பனம் வாங்கியுள்ளேனா என்றால் எதிர் வழக்குரையயில் சொல்லியுள்னே் தொகை எந்த தேதியில் முன்பணம் வாங்கியுள்ளேன் என்று சொல்லியுள்ளேன். எந்நதந்த அயிட்ட சொத்துக்களை 2 மற்றும் 3 பிரதிவாதிகளிடம் கிரய ஒப்பந்தம் மூலம் கொடு்த்துள்ளேன் என்பதையும் சொல்லியுள்ளேன். கிரய ஒப்பந்தத்தில் நானும் 2 மற்றும் 3 தரப்பினர்கள் என்றால் சரிதான் நான் ஏற்பட்டதாக சொல்லப்படும் கிரய ஒப்பந்தத்தில் வாதிகள் கையெழுத்து போடவில்லை. அவர்கள் தரப்பினர் அல்ல. அந்த சமயத்தில் அவர்கள் வெளிநாட்டில் இருந்தார்கள். நான் சொல்வது போல் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அது குறித்து எதிர் வழக்குரையில் சொல்லியிருப்பபேன் என்றாலும் அவ்வாறு ஒப்பந்தம் இல்லாததால் தான் நான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்லியுள்ள ஒப்பந்த்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதி என்பது தெரியவில்லை. 3 லட்சம் முன்பணம் வாங்கி வாதிகளுக்கு தலா 50 ஆயிரம் கொடுத்தேன் இந்த விபரத்தை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. என் எதிர் வழக்குரையில் 2 ம் வாதி வெளிநாட்டில் இருந்து

கடிதம் போட்டதாக சொல்லியுள்ளேன் தேதி நினைவில்லை. வெளிநாட்டில் வந்த சாதாரண தபால்தான். அந்த கடித்தை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு கடிதம் இருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலுமை் கடிதம் இல்லாதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காகக இரண்டாம் வாதி கடிதம் போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் வாதியின் மகன் சுரேஷ் கடிதம் எழுதினார் . தேதி நினைவில்லை . அதுவும் சாதாரண தபால் தான். அந்த கடிதத்தை தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு சுரேஷ் எழுதிய கடிதம் இருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் கடிதம் இல்லாதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக முதல் வாதி மகன் கடிதம் போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. குடும்ப சொத்தை பொறுத்து கடன் ஏற்பட்டதாக நான் சொல்லவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து நான் வாதிகளுக்கு தலா ரூபாய் 75 ஆயிரம் கொடுப்பதாக வாய்மொழியாக பேசப்பட்டதாக எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் அனுமதியுடன் தாவா சொத்துக்களை 3 ம் பிரதிவாதிக்கு விற்பதாக சொல்லியுள்ளேன். எந்த தேதியில் அனுமதி கொடுத்தார்கள் என்பது நினைவில்லை வாய்மொழி அனுமதியாக அல்லது எழுத்து மூலமாகவா என்றால் தபாலில் சொல்லியுள்ளார்கள். அவ்வாறு அனுமதி கொடுக்கவில்லை என்றாலும் கொடுத்திருந்தால் தேதியை குறிப்படிட்டுருப்பேன் என்றாலும் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. ஏற்கனவே விற்ற சொத்துகளை பாகம் கேட்க இயலாது என்று சொல்லியீருக்கிறேன். விற்பனை செய்ததற்கான கிரய ஆவணம் எதுவும் இல்லை கடிதம் தான். சொத்துக்களை விற்க வாதிகள் அதிகாரர ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் தவிர்த்து குடும்ப பொது சொத்து உள்ளதா என்றால் இரண்டு வீடுகள் உள்ளது அதனை சொல்லியுள்ளேன்., அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. குடும்ப பொது சொத்து சர்வே எண் விஸ்தீரணம் சொல்லவில்லை. இதர குடும்ப பொது சொத்து யார் பெயரில் உள்ளது என்று சொல்லியுள்ளேன். இதர குடும்ப சொத்து இல்லாததால்தான் அதன் சர்வே எண் யார் பெயரில் உள்ளது என்ற விபரம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இதர சொத்து நத்தம் பட்டா புல எண் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. 2 ம் வாதி குடியுருப்பு மனையை அவர் மனைவி பெயரில் மாற்றியுள்ளதாக சொல்லியுள்ளேன். சரவே எண் நான்கெல்லை, விஸ்தீரனம் சொல்லவில்லை. அது 2 ம்வாதியின்

தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் மனைவில் பெயரில் மாற்றினார் என்றால் சரியல்ல. இதர சொத்துக்களுக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வேறு சொத்துக்கள் இல்லை. முத்து என்னுடைய தந்தை. உதயம் என்னுடைய தாயார். வாசாஆ,5 முதல் 9 வரையில் உள்ள கிரய ஆவணங்கள் என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ.10 என் தயார் பெயரில் உள்ள கிரய ஆவண அசல். வாதிகள் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தைகொணங்டு என் பெற்றோர் பெயரில் மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்துகள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் வாதி எப்போது வெளிநாடு போனார் என்பது தெரியவில்லை. அவர் 1978 முதல் 2005 வரை 1 வாதி பணி நிமித்தமாக வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். 1979 முதல் 2008 வரை 2 வாதி பணி நிமித்தமாக வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். நான் வெளிநாடு செல்லவில்லை. வாதிகள் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தை கொண்டுதான் வாசாஆ 5 முதல்10 வரை குறிப்பிட்ட சொத்துகள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் தான் என் பெற்றோர் பெயரில் வாங்கினேன் என்று எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. என் பெற்றோருக்க நானும் வாதிகளும் தான் வாரிசுகள். தாவா சொத்துக்களை அடைய என் பெற்றோர் எழுதி வைக்கவில்லை. தாவா சொத்துக்கள் குடும்ப பொதுசொத்துகள் என்பதால் வாதிகளுக்கு தாலா 1/3 பாகம் கிடைக்க கூடியது என்றால் சரியல்ல. எதிர் வழக்குரைக்கு விரோதமாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சி பொய்சாட்சி என்பது சரியல்ல. தாவா சொத்துக்களை பொருத்து வாதிகள் விற்பனை செய்ய எனக்கு அதிகாரமோ அனுமதி கடிதமோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் எதிர் வழக்குரையில் சங்கதிகள் பொய் என்பதால் அதை உறுதி படுத்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு வாய்தாவும் 2 , 3 பிரதிவாதிகள் என்னுடன் வழக்கிற்கு சேர்து வருவார்கள் என்றால் சரிதான். அதனால் நான் 2 மற்றும்3 எதிர்வாதிகளுடன் சேர்ந்து பயணிக்கிறேன் என்றாலும் எனக்கு தனிகட்சி இல்லை வழக்கறிஞர் பெயரும் தெரியவில்லை என்றாலும்சரியல்ல.